**பலாங்கொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொட பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு** | | **இணங்காமை** |
|---|---|---|
| 1.21 ஆம் பந்தி | | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதன மாற்றங்கள் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 1.24 ஆம் பந்தி | (அ) | பாதீடு செய்யப்பட்ட தொகைகளும் உள்ளபடியான தொகைகளும் வெவ்வேறாக புலப்படும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ஆ) | பாதிடப்பட்ட தொகையை விஞ்சியிருக்காமை அல்லது விஞ்சியமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் அடிக்குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கை

சபைக்குக் கிடைக்கின்ற முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட வேண்டியமை பிழையாக காசு அடிப்படையில் இனங்காணப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விபத்திற்குள்ளாகிய சபைக்குச் சொந்தமான பெகோ இயந்திரத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 198,692 தொகையான காப்புறுதி இழப்பீடு சபையின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் படி ரூபா 1,073,046 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின்படி அது ரூபா 914,660 ஆக இருந்தது.

(இ) களஞ்சியக் கணக்கு பேரேட்டின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஹியூம் குழாய் மீதி ரூபா 107,350 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் படி அத்திகதியில் மீதி ரூபா 48,746 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிலுவையாக இருந்த அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 109,700 பெறுமதி இனங்காண்பதற்குரிய பட்டோலை மற்றும் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 370,050 தொகையான கணனி மற்றும் உப பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(1) | சபைக்குச் சொந்தமான பெகோ இயந்திரம் 2013 ஏப்ரல் மாதம் விபத்திற்குள்ளாகி ரூபா 524,341 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் அதற்கு பொறுப்புவாய்ந்தவர்களைத் தீர்மானித்தல், ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை சமர்ப்பித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,943,628 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,143,983 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,087,611 தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் போது வருமான உதவிகள் ரூபா 2,022,537 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஏனைய வருமானம் முன்னைய ஆண்டை விட ரூபா 1,285,897 இனால் குறைவடைந்தமையும், ஆண்டின் செலவினம் ரூபா 5,000,744 இனால் அதிகரித்தமையும் மேற்கூறப்பட்ட நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 509,980 | 334,830 | 247,166 |
| வாடகை | 20,237 | 18,956 | 28,105 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 11,400 | 15,300 | 43,250 |
| ஏனைய வருமானம் | 116,335 | 116,322 | 38,905 |

#### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,073,046 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 09 செலவின விடயங்களுக்கான ரூபா 83,000 தொகையான நிதி ஏற்பாட்டில் எச்செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வட்டி செலுத்துவதற்கு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 750,000 தொகை அதாவது 75 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 159,172 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நானாவித வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலக் கூறு வாடகை ரூபா 43,250 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான ஜே.சீ.பீ இயந்திரத்தை ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நட்டம் ரூபா 1,627,684 ஆக இருந்தது.

### 3.2 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்ட கமத்தொழில் குழுவின் தீர்மானத்தின் படி, கல்தொட்ட கமநல சேவை நிலையத்தில் காணப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் 31 உபகரணங்கள் சபைக்கு கிடைத்திருந்ததுடன் அந்தச் சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் 2014 மார்ச் மாதம் வரையிலும் அவை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கொங்கிரீட் கலவையொன்று பல வருடகாலமாக செயற்பாடின்றிக் காணப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான பழைய கெப் வாகனமொன்று சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(ஈ) சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிலொன்றின் பகுதிகள் கழற்றி பரவலாகப் போடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதி முகாமைத்துவம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு